சுருக்கம்

**சுய உதவிக் குழுக்கள் – 2010–11ஆம் ஆண்டில் 50,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல் – ரூ.1.75 கோடி (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தி ஐந்து இலட்சங்கள் மட்டும்) ஒப்பளித்து ஆணை வெளியிடப்படுகிறது.**

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை

அரசாணை (நிலை) எண்.55 நாள் 24.05.2010

திருவள்ளுவர் ஆண்டு 2041

வைகாசி – 10

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.87, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 05.08.2009.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களின் கடித எண்.733/டி1/2010, நாள் 05.05.2010.

***************

ஆணை:

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் அனைவரும் சுய உதவிக் குழு இயக்கத்தில் சேர்ந்து பயனடையும் வகையில் 2009–2010 ஆம் ஆண்டில் புதிய 50,000 சுய உதவிக் குழுக்களும், 2010–2011 ஆம் ஆண்டில் 50,000 புதிய சுய உதவிக் குழுக்களும் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில் 2009–2010 ஆம் ஆண்டிற்கு 50,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்க ஆணையிடப்பட்டது. 2010–11 ஆம் ஆண்டில் 50,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

2. படிக்கப்பட்டவை 2–ல் உள்ள கடிதத்தில், 2010–2011 ஆம் ஆண்டில், இது வரை சுய உதவிக் குழுக்களில் சேராத மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள், நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளில் வசிப்பவர்கள், குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம ஊராட்சிப் பகுதிகளில் (சுய உதவிக் குழுவில் இணையத் தகுதி உள்ள மகளிரின் எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கும் குறைவாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ள கிராம ஊராட்சிகள்) முன்னுரிமை அடிப்படையில் 50,000 புதிய

சுய உதவிக் குழுக்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**3.** தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் புதிய மகளிர் சுய உதவிக் குழு அமைப்பதற்கு அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு அமைப்புத் தொகையாக குழு ஒன்றுக்கு ரூ.350/– வீதம் அரசு ஆணைப்படி வழங்கப்படும் எனவும், 50,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைப்பதற்கான செலவினத் தொகை ஒரு குழுவிற்கு ரூ.350/– வீதம் 50,000 குழுக்களுக்கு ரூ.1.75 கோடி ஆகும் எனவும், 2010–11ம் ஆண்டில் 50,000 புதிய சுய உதவிக்குழுக்கள் அமைப்பதற்காக ரூ.1.75 கோடி (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தி ஐந்து இலட்சங்கள் மட்டும்) ஒப்பளித்து உரிய அரசாணை வழங்குமாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

**4.** மேலே, பத்தி 3–ல் உள்ள மேலாண்மை இயக்குநரது கருத்துருவை அரசு மிகவும் கவனமுடன் பரிசீலித்து, இது வரை சுய உதவிக் குழுக்களில் சேராத மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள், நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளில் வசிப்பவர்கள், குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம ஊராட்சிப் பகுதிகளில் (சுய உதவிக் குழுவில் இணையத் தகுதி உள்ள மகளிரின் எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கும் குறைவாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ள கிராம ஊராட்சிகள்) ஆகியோரை உள்ளடக்கி, 50,000 புதிய சுய உதவிக் குழுக்களை உருவாக்கிட 2010–2011 ஆம் நிதியாண்டில் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1,75,00,000/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தி ஐந்து லட்சங்கள் மட்டும்) விடுவித்தும், மேற்கூறிய தொகையை காலாண்டு முறையில் ஒதுக்கீடு செய்வதிலிருந்து விலக்களித்தும் அரசு ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி 4–ல் விடுவிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2235 – சமூக பாதுகாப்பும், நலனும் –02 சமூக நலன் 103 – மகளிர் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டின் திட்டப்பணிகள் II, மாநிலத்திட்டம் LO – சுயஉதவிக் குழுக்களை அமைப்பதற்கான நிதியுதவி –09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (DPC 2235-02-103-LO.0933)"

**6.** மேலே, பத்தி 4–ல் விடுவிக்கப்பட்டத் தொகையினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஆணையர் பெற்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு காசோலையாக வழங்க உரிய அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களுடன் கலந்தாலோசித்து வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது நடைமுறையின் தேவைக்கு ஏற்றவாறு மாற்றம் செய்வதற்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.350/செயலாளர் (செலவினம்)/2010, நாள் 14.05.2010–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை –32.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை –15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், ()
அனைத்து திட்ட அலுவலர்கள், ()
(மகளிர் திட்டம்) ()
(மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு
நிறுவனம் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை –18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –35.

நகல்:–
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊரக வளர்ச்சி)த்துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்
துறையின் தனிச் செயலர், சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வரவு (ம) செலவு (ம) ஒருங்கிணைப்பு) துறை,
சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.